Eastern University, Sri Lanka

Faculty of Commerce and Management

External Degree

Part I Examination in Business Administration - 2008 / 2009 (May 2013) (Proper/Repeat)

EXB 202 Advanced Financial Accounting

23 AUG 2013
EASTERN UNIVERSITY

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

கணித்தற் பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது.

நேரம்: மூன்று மணித்தியாலங்கள்

. 31.12.2012 இல் உள்ளவாறான ABC கம்பனியின் ஐந்தொகை பின்வருமாறு:

| பொறுப்புக்கள் | ரூபா | சொத்துக்கள் | ரூபா |
|---|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் (ஒவ். ரூ.10 ) | 200000 | காணி கட்டடம் | 250000 |
| 10% மீட்கத்தக்க முன்னுரிமை பங்கு மூலதனம் (ஒவ். ரூ.10) | 400000 | தளபாடமும் பொருத்திகளும் | 150000 |
| இலாப நட்டக் கணக்கு | 120000 | முதலீடுகள் | 250000 |
| பொது ஒதுக்கம் | 200000 | இருப்புக்கள் | 100000 |
| கடன்கொடுத்தோர் | 60000 | கடன்பட்டோர் | 50000 |
| முன்னுரிமைப் பங்கிலாப சென்மதி | 20000 | காசும் வங்கியும் | 200000 |
| | **1000000** | | **1000000** |

10% மீட்கத்தக்க முன்னுரிமை பங்குகள் அனைத்தும் 01.01.2013 இல் மீட்கப்பட்டன. ரூ.150000 பெறுமதியான முதலீடுகள் கொள்விலையுடன் 20% கூட்டிய விலையில் விற்கப்பட்டன. மீட்புக்கு கிடைக்கத்தக்க வருமான ஒதுக்கங்களை எல்லாவற்றையும் பயன்படுத்திய பின்னர் மிகுதிக்கு போதுமான அளவு புதிய சாதாரண பங்குகள் ரூ.12 விலையில் வழங்கப்பட்டன. பங்கிலாப சென்மதி உட்பட முன்னுரிமைப் பங்குதாரருக்குரிய கொடுப்பனவுகள யாவும் முறையாக மேற்கொள்ளப்பட்டன.

**வேண்டப்படுவது :**

பின்வருவனவற்றைத் தயாரிக்குக:

(அ) பொருத்தமான பேரேட்டுக் கணக்குகள்

(ஆ) முன்னுரிமை பங்குகள் மீட்பின் பின்னரான ஐந்தொகை

(20 புள்ளிகள்)

**02.** H கம்பனியானது S கம்பனியின் 60% சாதாரண பங்குகளை 01.07.2012 இல் ரூ.220000 விற்கு கொள்வனவு செய்தது. 31.12.2012 இல் உள்ளவாறான அக்கம்பனிகளின் ஐந்தொகைகள் பின்வருமாறு:

| பொறுப்புக்கள் | H கம்பனி | S கம்பனி |
|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் (பங்கு ஒன்று ரூ.10) | 500000 | 300000 |
| பொது ஒதுக்கம் | 200000 | 150000 |
| இலாப நட்டக் கணக்கு | 250000 | 100000 |
| கடன்கொடுத்தோர் | 200000 | 150000 |
| | **1150000** | **700000** |
| **சொத்துக்கள்** | | |
| காணி கட்டடம் | 400000 | 350000 |
| பொறி இயந்திரம் | 350000 | 100000 |
| முதலீடுகள் | 300000 | 150000 |
| இருப்புக்கள் | 40000 | 30000 |
| கடன்பட்டோர் | 30000 | 45000 |
| வங்கி மீதி | 30000 | 25000 |
| | **1150000** | **700000** |

**மேலதிக தகவல்கள் :**

(i) 01.01.2012 இல் S கம்பனியின் பொது ஒதுக்கக் கணக்கில் ரூ.80000 வும் இலாபநட்ட கணக்கில் ரூ.30000 செலவு மீதியும் காணப்பட்டன.

(ii) H கம்பனியின் கடன்பட்டோர் S கம்பனியிடமிருந்து பெற வேண்டிய ரூ.7500 ஐ உள்ளடக்கியுள்ளது.

(iii) S கம்பனியின் இலாபங்கள் ஆண்டு முழுவதும் சமனாக எழுந்தன.

(iv) கொள்வனவுத் திகதியில் S கம்பனியின் முதலீடுகள் ரூ.160000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டன.

**வேண்டப்படுவது :**

31.12.2012 இல் உள்ளவாறான திரட்டிய ஐந்தொகையைத் தயாரிக்குக.

(**20** புள்ளிகள்)

03. MDN கம்பனியானது GVR மோட்டர்ஸ் கம்பனியிடமிருந்து வாடகைக் கொள்வனவு முறையின் கீழ் ட்ரக்டர் வண்டி ஒன்றை 01.01.2010 இல் கொள்வனவு செய்தது. வாடகைக் கொள்வனவு ஒப்பந்தத்தின் படி ரூ.119500.00 உடன் காசாசையும் 31.12.2010 இலிருந்து தொடங்கும் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் ரூ.23152.50 வருடாந்த தவணைக் கட்டணத்தை மூன்று ஆண்டுகளுக்கு செலுத்துதல் வேண்டும். வாடகைக் கொள்வனவு வட்டி வீதம் ஆண்டுக்கு 5% ஆகும். இவ்வட்டி வருடாந்த தவணைக் கட்டணத்தில் உள்ளடங்கியுள்ளது.

23 AUG 2013
UNIVERSITY, SRI LANKA

**வேண்டப்படுவது :**

1. வாடகைக் கொள்வனவு மொத்த வட்டியையும் வருடாந்த வட்டியையும் கணிக்க.
2. ட்ரக்டர் வண்டியின் காசு விலையைக் கணிக்க.
3. ட்ரக்டர் வண்டியின் வாடகைக் கொள்வனவு விலை என்ன?
4. 2010, 2011, 2012 ஆண்டுகளுக்கு வாடகை கொள்வனவாளரின் ஏட்டில் காசு விலையைப் பதியும் முறையில் பின்வரும் கணக்குகளைத் தயாரிக்குக:

   i. ட்ரக்டர் வண்டி கணக்கு
   ii. MDN கம்பனிக் கணக்கு
   iii. வாடகை கொள்வனவு வட்டிக்கணக்கு

**(20 புள்ளிகள்)**

**04.** XYZ கம்பனியின் 2012 ம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் பின்வருமாறு:

**31.12.2012 இல் முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்று**

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| விற்பனைகள் | | 2040000 |
| கழி : விற்பனைக் கிரயம் | | 1360000 |
| மொத்த இலாபம் | | 680000 |
| முதலீட்டு வருமானம் | | 25000 |
| | | 705000 |
| கழி : செயற்பாட்டுச் செலவுகள் | 230000 | |
| பெறுமானத் தேய்வு | 110000 | |
| வட்டி | 70000 | 410000 |
| வரி கழிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | | 295000 |
| கழி : வரி | | 130000 |
| வரி கழித்த பின் செயற்பாட்டு இலாபம் | | 165000 |
| கழி : பங்கிலாபம் | | 90000 |
| | | 75000 |
| மீதி முன் கொண்டு வந்தது | | 425000 |
| மீதி முன் கொண்டு சென்றது | | **500000** |

**31.12.2011 மற்றும் 31.12.2012 இல் உள்ளவாறான ஐந்தொகைகள்**

| பொறுப்புக்கள் | 2011 | 2012 | சொத்துக்கள் | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| சாதாரண பங்கு மூலதனம் | 500000 | 500000 | நிலையான சொத்துக்கள் | 850000 | 1000000 |
| இலாப நட்டக் கணக்கு | 425000 | 500000 | இருப்புக்கள் | 340000 | 350000 |
| நீண்டகாலக் கடன் | 500000 | 530000 | கடன்பட்டோர் | 360000 | 330000 |
| கடன்கொடுத்தோர் | 175000 | 200000 | காசு | 230000 | 250000 |
| வரி சென்மதி | 125000 | 130000 | | | |
| செலவுகள் சென்மதி | 15000 | 25000 | | | |
| பங்கிலாப சென்மதி | 40000 | 45000 | | | |
| | **1780000** | **1930000** | | **1780000** | **1930000** |

**வேண்டப்படுவது :**

XYZ கம்பனியின் 31.12.2012 இல் முடிவுற்ற ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்றினை நேர்முறையில் தயாரிக்குக.

**(20 புள்ளிகள்)**

05. இலங்கையில் தலைமை அலுவலகத்தினைக் கொண்டு லண்டனில் இயங்கும் கிளை ஒன்றின் ஏடுகளிலிருந்து 31.12.2012 இல் பெறப்பட்ட மீதிகள் பின்வருமாறு:

23 AUG 2013
UNIVERSITY, SRI

| | £ | £ |
|---|---|---|
| கொள்வனவு / விற்பனை | 9375 | 14062 |
| வருமதி உண்டியல் / செனமதி உண்டியல் | 1200 | 1050 |
| 01.01.2012 இல் இருப்பு | 1575 | |
| கடன் பட்டோர் / கடன் கொடுத்தோர் | 4500 | 3000 |
| சம்பளமும் கூலியும் | 600 | |
| வாடகையும் வரியும் | 630 | |
| தளபாடம் | 525 | |
| வங்கியிலுள்ள காசு | 3345 | |
| கொழும்பு தலைமை அலுவலகக் கணக்கு | | 3638 |
| | **21750** | **21750** |

**மேலதிக தகவல்கள்:**

1. 31.12.2012 இல் இருப்புக்கள் £ 375

2. கொழும்பு தலைமை அலுவலக ஏட்டின் லண்டன் கிளைக் கணக்கு வரவு மீதியாக ரூ.498000 ஐக் காட்டியது.

3. கொழும்பு தலைமை அலுவலக ஏட்டில் கிளை தளபாடக் கணக்கு ரூ.75000 ஐக் காட்டியது.

4. நாணய மாற்று வீதங்கள் பின்வருமாறு காணப்பட்டன.

   31.12.2012 இல் ரூ. 140 = 1£

   31.12.2012 இல் ரூ. 130 = 1£

   2012 இல் ஆண்டிற்கான சராசரி ரூ. 120 = 1£

**வேண்டப்படுவது:**

தலைமை அலுவலக ஏட்டில் (ரூபாவில்) பின்வருவனவற்றை தயாரிக்குக:

1. 31.12.2012 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கிளையில் வியாபார இலாப நட்டக் கணக்கு.

2. அத் திகதியில் உள்ளவாறான ஐந்தொகை

**(20 புள்ளிகள்)**